DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 10.09.2024.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.03/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.1 |
| Name | : | சுரேஷ் |
| Father Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. Chandar Rao, Grade III Bench Clerk, of this court, on 10.09.2024. in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கிளேசி புருக் எஸ்டேட்டில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 10.03.2024-ம் தேதி எஸ்டேட்டில் காவலாளி விடுமுறை என்பதால் எதிரியை காவல் பணிக்கு அமர்த்தி இருந்தோம். அன்று முழுவதும் அவர் தான் பணியில் இருந்தார். அன்று விடுமுறை தினம் என்பதால் எதிரி மட்டுமே பணியில் இருந்தார். நான் எனது குடியிருப்பில் இருந்தேன். மாலை சுமார் 04.30 மணிக்கு எஸ்டேட்டில் யாருமில்லை என்று சொல்லிவிட்டு அவர் கிளம்பி விட்டார். இரவு காவலாளி வெள்ளையன் மாலை 04.30 மணிக்கு பணிக்கு வந்தார். மாலை சுமார் 05.00 மணிக்கு எஸ்டேட்டில் வேலை செய்யும் சங்கி மற்றும் சுர்ஜீத் ஆகிய வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் வந்து எஸ்டேட்டில் ஒரு மூட்டை மிளகு பறித்து மூட்டையில் யாரோ கட்டி வைத்து இருப்பதாக சொன்னார்கள். நானும் சென்று பார்த்தேன். அங்கே மூட்டை இருந்தது. அடிக்கடி எஸ்டேட்டில் திருடு போவதால் அந்த மூட்டையை எடுப்பதற்காக திருடர்கள் வருவார்கள் என்பதால் நானும் பர்வின் குமார் வாட்ச்மேன் சங்கி மற்றும் ஆகியவர்களை காவலுக்கு வரச்சொன்னேன். ஓட்டுநர் அழகேசனும், நானும் சாலையில் கண்காணித்து இருந்தோம். இரவு சுமார் 10.00 மணிக்கு ஒரு மோட்டார் பைக் வந்தது. அதில் வந்தவர் எஸ்டேட் கம்பி வேலி ஓரம் நிறுத்தி விட்டு மூட்டை இருந்த இடத்தை நோக்கி சென்றார். நானும் ஓட்டுநரும் பைக் அருகே சென்று பார்த்தபோது அது பகல் வாட்ச்மேன் எதிரி கோவிந்தராஜீடையது என தெரியவந்தது. பிறகு அவரை நாங்கள் பின் தொடர்ந்து சென்றோம். அவர் மூட்டை எடுத்துக்கொண்டு சிறிது தூரம் சென்றார். அருகில் சென்று டார்ச் அடித்து பார்த்தபோது கோவிந்தன் என தெரியவந்ததால் நீயாடா என கேட்டவுடன் அவர் மூட்டை போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார். வேலி மீது ஏறி கீழே குதித்தபோது முட்டியில் அடிப்பட்டதால் அவரால் ஓட முடியாமல் எங்களிடம் மாட்டிக்கொண்டார். தான் செய்தது தவறு என்றும், தன்னை

மன்னித்து விடுமாறும் வெளியில் சொல்லவேண்டாம் என்று சொல்லிவிட்டார். நடந்த விவரத்தை விசிடர் சுப்பிரமணியனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். கோவிந்தசாமியிடம் அவரும் போனில் பேசினார். அவரிடமும் தான் செய்தது தவறு மன்னித்து விடுங்கள் என எதிரி கெஞ்சினார். பிறகு சுப்பிரமணி காலையில் எதிரியை வந்து தன்னை பார்க்குமாறும் தற்போது அவரை விட்டுவிடுமாறும் சொன்னார். எதிரி வந்த பைக்கை எஸ்டேட்டில் விட்டு விட்டு என்னுடைய பைக்கில் எதிரியை அவரது வீட்டில் விடபோனேன். அப்போதும் எதிரி தன் வீட்டில் எதுவும் சொல்லவேண்டாம் என்றும் வீட்டிற்கு தெரிந்தால் அனைவரும் செத்து விடுவோம் என கெஞ்சினார். எதிரியை அவரது வீட்டில் விட்டு விட்டு நானும் அழகேசனும் திரும்பி வந்துவிட்டோம். மறுநாள் காலை 09.00 மணிக்கு விசிடர் சுப்பிரமணி, கணேசன் மற்றும் மாது ஆகியோர் எஸ்டேட்டில் இருந்தபோது எதிரி வந்தார். சுப்பிரமணியும் கணேசனும் எதிரியிடம் விசாரணை செய்தார்கள். இதற்கு முன்பு தான் திருடிய 1 மூட்டை மிளகும், 3 மூட்டை காப்பியும் தன் வீட்டில் வைத்திருப்பதாகவும் அதை எடுத்து தருவதாக அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்றார். அப்போது நானும், அஜய், சுர்ஜீ ஆகியோர் எதிரி வீட்டிற்கு சென்றோம். அப்போது எதிரி அவரது அப்பாவும் அவரது மனைவியும் இருந்தார்கள். அப்போது அவர்கள் கோவிந்தன் திருடிய மிளகும், காப்பியும் அந்த வீட்டில் இல்லை என்றும் கீழ் வீட்டில் இருப்பதாக அழைத்துச்சென்று 3 மூட்டை காப்பியும், 1 மூட்டை மிளகும் கொடுத்தார்கள். அப்போது எதிரியின் மனைவி அதை வீடியோ பதிவு செய்தார். அதை ஏன் பதிவு செய்கிறிர்கள் என்று கேட்டபோது உங்களுடைய பொருளை எடுத்துச்செல்கிறிர்கள் திரும்ப வந்து கேட்டால் என்ன ஆதாரம் உள்ளது அதற்காக எடுக்கிறேன் என்று சொன்னார். பிறகு மூட்டைகளை எடுத்துக்கொண்டு கோவிந்தனை அவரது வீட்டில் இறக்கி விட்டு நாங்கள் சென்றுவிட்டோம். மறுநாள் 12-ம் தேதி காலையில் கோவிந்தசாமியின் அப்பாவும், மனைவியும் எஸ்டேட்டிற்கு வந்து எதிரி திருடிய காப்பியையும், மிளகையும் கொடுத்துவிட்டோம் எதற்காக ஊரில் அவர் திருடியதாக சொன்னீர்கள். எல்லோரும் கேட்கிறார்கள் எங்களுக்கு அசிங்கமாக உள்ளது என தகராறு செய்தார்கள். நான் உடனே விசிடர் சுப்பிரமணியத்திற்கு போன் செய்து சொன்னேன். உடனே அவர் இது சரிபட்டு வராது புகார் கொடு என அறிவுறுத்தினார். அதனால் நான் 12-ம் தேதி கோவிந்தசாமி மீது நடவடிக்கை எடுக்கும்மாறு ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்தான் நான் அளித்த புகார் என்றால் சரிதான். **அது அ.சா.ஆ-1 ஆகும்.** இது சம்மந்தமாக 14.03.2024-ம் தேதியன்று போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் நடந்த விவரம் சொன்னேன். போலீசார் எங்கள் முன்னிலையில் எதிரி திருடிய மிளகு மற்றும் காப்பியையும் அவர் வந்த வாகனத்தையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

புகார் 13.03.2024-ம் அளித்தாக உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் இரவு 08.00 மணிக்கு புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யப்பட்டுள்ளதாக இருக்கிறது என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதினேன். 2 மூட்டை மிளகு, 3 மூட்டை காப்பி ஆகியவற்றை எத்தனை நாள் கழித்து கொடுத்தோம் என்றால் சுமார் 3 நாள் இருக்கும். 2 மூட்டை மிளகு, 3 மூட்டை காப்பியை ஏற்காடு போலீசார் கொண்டு வரச்சொன்னார்கள் 3 நாட்களுக்கு பிறகு கொண்டு வந்து ஒப்படைத்தோம் என்றால் சரிதான். யார் யார் எடுத்துச்சென்றோம் என்றால் நானும் ஓட்டுநர் அழகேசனும் ஜீப் எடுத்து சென்றோம். என்ன தேதி, நேரம் என்றால் தற்போது நினைவில் இல்லை. 10-ம் தேதி எத்தனை மணிக்கு திருடு போனது என எனக்கு தெரியாது என்றால் சரிதான், 5 மணிக்கு எனக்கு தகவல் வந்தது. அன்றைய தினம் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். மறுநாளும் புகார் அளிக்கவில்லையா என்றால் ஆமாம். 13.03.2024-ம் தேதி இரவு 08.00 மணிக்கு நான் புகார் அளிக்கவில்லை என்றால் தேதி சரியாக ஞாபமில்லை ஆனால் இரவு தான் கொடுத்தேன். என்னுடன் அப்போது யார் வந்தது என்றால் ஓட்டுநர் அழகேசன் மட்டும் வந்தார். அழகேசனிடம் நான் எதுவும் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். எங்கள் எஸ்டேட் குறைந்தபட்சம் 250 ஏக்கர் இருக்கும் என்றால் சுமார் 200 ஏக்கர் இருக்கும். எஸ்டேட்டில் 30 பேர் வேலை செய்கிறார்கள். அது மட்டுமல்லாது தினக்கூலிக்கும் ஆட்கள் வருவார்கள் என்றால் சரிதான். எஸ்டேட் முதலாளி துவாரகநாதன் 2022-ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது இறப்பிற்கு பிறகு எஸ்டேட்டில் பல திருட்டு சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். வாழவந்தி மெயின் சாலையிலிருந்து 1 கி.மீ தொலைவில் எங்களது அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். திருடு போனதாக சொல்லப்படும் இடம் எது என என்னால் குறிப்பாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல, மெயின் சாலைக்கு மிக அருகாமையில் உள்ளது. மிளகு திருடு போன இடத்திற்கும் எங்கள் அலுவலகத்திற்கும் சுமார் 2 கி.மீ இருக்கும் என்றால் தவறு, சுமார் 1/2 - 3/4 கி.மீ. இருக்கும். எங்கள் அலுவலகத்திற்கும் குடியிருப்புக்கும் எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 500 அடி தொலைவில் இருக்கும். எங்கள் அலுவலகத்தில் காப்பி, மிளகிற்கு குடோன் வசதி உள்ளது என்றால் சரிதான். குடோனில் இருப்பு உள்ள விவரம் பதிவேட்டில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். அன்றைய தேதியில் குடோனில் பதிவேட்டு படி இருப்பு குறைபாடு இல்லை என்றால் சரிதான். தொழிலாளர்கள் வேலை செய்வதற்கான வேலை பதிவேடு உள்ளது என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று எதிரி பணியில் இருந்ததற்கான வருகை பதிவேட்டை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு வாழவந்தி ஒட்டுகாட்டூரில் 4 ஏக்கரில் காப்பி தோட்டமும் மிளகும் உள்ளது என்றால் தோட்டம் உள்ள விவரம் தெரியும் அதன் பரப்பளவு தெரியாது. எதிரி எங்கள் எஸ்டேட்டில் மிளகை பறித்ததற்கான நேரடி சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். எதிரி சம்பவத்தன்று எங்கள் எஸ்டேட்டிற்கு பணிக்கு வரவில்லை என்றால் தவறு. துவாரகநாதன் இறந்த பிறகு அவரது மனைவி என் மீது காப்பு கொட்டை திருடியதாக ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார் என்றால் இல்லை. அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் ஒரு பஞ்சாயத்து நடந்து என்னை எச்சரித்தார்கள் என்றால்

எனக்கு முன்பு பணியில் இருந்த மேலாளர் அசோக்குமார் என்பவரை தான் கண்டித்தார்கள் என்னை அல்ல. அந்த சம்பவத்தின் போது என் முதலாளி அம்மாவிற்கு எதிரி ஆதரவாக இருந்ததால் எனக்கு அவருக்கும் விரோதம் என்றால் இல்லை. ஒரு நாளைக்கு ஒரு நபர் எத்தனை கிலோ பறிக்கலாம் என்றால் சுமார் 100 கிலோ வரை பறிக்கலாம். ஒரு நபர் 10 – 15 கிலோவிற்கு மேல் பறிக்க இயலாது என்றால் சரியல்ல. 11–ம் தேதி எதிரி கீரைக்காடு பேருந்து நிறுத்தம் அருகே இருந்தபோது நான் விசிடர் சுப்பிரமணியன், கணேசன், மாது ஆகியோர் எதிரியை வலுகட்டாயமாக ஜீப்பில் அழைத்துச்சென்று எஸ்டேட்டில் வைத்து தாக்குதல் நடத்தினோம் என்றால் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை. அவரை அடித்து துன்புறுத்தி அவரது காட்டில் விளைத்திருந்த காப்பி, மிளகை நாங்கள் எடுத்து வந்தோம் என்றால் இல்லை. ஒரு வேளை எதிரி திருடியிருந்தாலும் அவரது வீட்டில் அத்துமீறி நுழைந்து பொருட்களை எடுத்து வர உரிமை இல்லை என்றால் நாங்கள் அவ்வாறு எடுத்துவரவில்லை எதிரி சொல்லிதான் அவரது மனைவி எடுத்துக்கொடுத்தார். 11.03.2024–ம் தேதி எதிரி தனக்கு ஏற்பட்ட காயம் சம்மந்தமாக சேலம் அரசு மருத்தவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு ஏற்காடு காவல் நிலையத்தில் இது பொறுத்து புகாரும் அளிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எந்த வடமாநிலத்தவரும் எனக்கு தகவல் சொல்லவில்லை என்றாலும் நாங்களாக வழக்கிற்காக தகவல் சொன்னதாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி மீது உள்ள முன்விரோதம் காரணமாக ஏற்கனவே நடந்த திருட்டு சம்பவத்திற்கு எதிரி மீது புகார் அளித்துள்ளேன் என்றால் எதிரிதான் திருடினார். எதிரியிடம் இருந்து எடுத்துச்சென்ற வழக்குச்சொத்துக்கள் அனைத்தும் எதிரியின் நிலத்தில் விளைந்தது என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் 10–ம் தேதி நடந்திருந்தால் அன்றை தினமே புகார் அளித்திருப்பேன் என்றாலும் அவ்வாறு சம்பவம் நடைபெறததால் தான் மூன்று நாட்கள் கழித்து தாமதமாக அளித்துள்ளேன் என்றாா சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. M. Jayanthi,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.